[1987 மார்ச் 6]

தமிழ்நாட்டில் சுயநிதி மருத்துவக் கல்லூரி

90—(*வினா எண். 12168)—திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மூன்று சுய நிதி மருத்துவக் கல்லூரிகளும், மத்திய மருத்துவக் குழுவின் அனுமதியோ அல்லது மத்திய அரசின் அனுமதியோ பெறாமல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என மத்திய சுகாதார அமைச்சர் நாடாளுமன்ற மேலவையில் எழுத்து மூலம் தெரிவித்துள்ளது அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 91 முதல் 94 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

தமிழகத்தில் சாதியின் பெயரில் சங்கங்கள்

95—(*வினா எண். 2283)—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சாதியின் பெயரால் உள்ள சங்கங்களை தடை செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) இதுகுறித்து மத்திய அரசிற்கு தமிழக அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள அனைத்துச் சாதிகளும் சங்கங்கள் வைத்திருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியும்

என்று கருதுகிறேன். அந்தச் சங்கங்களால் இனக்கலவரங்கள் உண்டாக்கப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு அதன்மூலம் சமுதாயக் கேடுகளை உருவாக்கி ஒற்றுமையைக் குலைக்கிற நிலை ஏற்படுவதால் அந்த சாதி சங்கங்களை அடக்குவதற்கு தடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதி சங்கம் வைத்துக் கொள்வது அரசியல் சாசன அடிப்படை உரிமைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. ஆகவே அரசியல் சாசனத்தைத் திருத்துவதற்கு முதலில் மைய அரசு முன்வரவேண்டும். எல்லோரும் ஏகோபித்து முடிவு எடுத்தால் அதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

திரு. ஜி. கே. ஜே. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவண் அரசு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இந்தப் பேரவையிலேயே சாதியை ஒழிக்கின்ற பணியை தமிழக தலைமை அமைச்சர் செய்துவருகிறார்கள். தெருவெல்லாம் சாதி ஒழிந்திருக்கிறது. ஆகவே சாதி சங்கங்களை ஒழிப்பதற்கு அரசே தீர்மானத்தைக் கொண்டுவருமா? அப்படிப்பட்ட தீர்மானத்தைக் கொண்டுவருகிற வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நம் கையிலே இருக்கிறது. அப்படிப் பெயர்களை வைப்பதும் எடுப்பதும் நம் கையில் இருக்கிறது. பொதுவாக மாநிலத்தில் உள்ள சாதிகள் சங்கங்களை வைத்துக் கொள்வது என்பது அரசியல் சாசன உரிமை என்று கருதுகிறார்கள். எல்லோரும் சாதி சங்கங்கள் இருக்கக்கூடாது என்று முடிவெடுத்தால் அதைப் பற்றி நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு முடிவெடுக்கலாம்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலே செல்கிற தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்திலேதான் தமிழகத்திலே பல சமுதாயத் திருப்பங்களும் பல சாதனைகளும் ஏற்பட்டிருக்கின்றன. கல்விக் கூடங்களிலும், வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் மற்றும் அரசுத் துறைகளிலும் சாதிப் பெயர் கூடாது என்று ஆணையிடப்படுமா? சாதிப் பெயர்கள் நீக்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

1987 மார்ச் 6]

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல ஊர்களுடைய பெயர்கள் சில சாதிப் பெயர்கள் சூட்டப்பட்டு உள்ளன. உதாரணமாக மதுரை வடக்குத் தாலுகாவில் ஒரு ஊருக்கு பறையன்குளம் என்று வைக்கப்பட்டிருக்கிறது. தீண்டாமையை ஒழிக்க பாடு படுகிற நாம் சில குறிப்பிட்ட சாதிப்பெயர்களை வைத்து அவர்களை இழிவுபடுத்துவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு ஊரினுடைய பெயர் அப்படி இருக்குமானால் அது ஒரு சமூகத்தை இழிவு படுத்துவதாகக் கருதப்படுமானால் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பினால் அரசு அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதியின் பெயரால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டு விழா நடக்கிறது. ஜாதியின் பெயரால் கோரிக்கைகளைச் சொல்லி கூட்டங்கள் நடத்துகிறார்கள். இதில் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களும் அமைச்சர் பெருமக்களும் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : : பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களைக் கலந்து கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தில் ஜாதி அமைப்புகளுக்கு இடம் உண்டு என்று அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். அரசியல் சட்டத்தில் அப்படி ஒரு ஷரத்து இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஜாதி அமைப்புகளை ஊக்குவிக்க வேண்டுமென்று ஜாதி அமைப்புகளை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக அரசியல் சட்டம் எங்கும் குறிப்பிடப்படவில்லையென்று தான் நான் கருதுகிறேன். அமைச்சர் அவர்கள் கூறிய கருத்து சரியல்ல. நான் இங்கே கேட்டுக்கொள்வதெல்லாம் ஜாதி அமைப்புகளை ஊக்குவிக்காமல் இருப்பதற்குத் தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்து வந்தது? தெளிவான கருத்தை அமைச்சர் சொல்வாரானால் நான் நன்றி உள்ளவனாகஇருப்பேன்.

மாண்புமிகு திரு. வி. வி .சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, நானே நாடாளுமன்ற மேலவையில் உறுப்பினராக இருந்த பொழுது, அரசியல் சாசனம் திருத்த மசோதா வந்தபொழுது அதுபற்றி குறிப்பிட்டேன். அப்பொழுது இதுபற்றி சொன்னார்

கள். அது மிகவும் கடினமான காரியம், பிற்பட்ட வகுப்பு என்று வைத்துக் கொண்டிருக்கிறோம், அதற்கு அடையாளம் காண்பதற்கு ஜாதிப்பெயர் இருக்கவேண்டும். இங்கே ஜாதியை அகற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள், முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. ஆகவே, இதுபற்றிப் பேச வேண்டாம் என்று மாநிலங்கள் அவையில் அறிவுரை வழங்கப்பட்டது. அதைத் தான் சொன்னேன். பொதுவாக மாண்புமிகு உறுப்பினர் கேட்டவை பற்றி, தனிக் கேள்வி போட்டால் நாம் அதுபற்றி பேசலாம்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் மிக முக்கிய பெரிய பொறுப்பில் உள்ளவர்கள் ரிடையர் ஆன பின்னால் ஒரு ஜாதி சங்கத்தினுடைய தலைவராக இருக்கிறார்கள். ஆக, அவர்கள் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கும்போதும் அந்த ஜாதி சார்பாக நடந்து கொள்வதற்கு அது காரணமாக இருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தில் உத்தியோகத்தில் பொறுப்பில் இருப்பவர்களோ அல்லது ரிடையர் ஆன பின்னாலோ ஜாதி சங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கக்கூடாது என்று தடையை நம்முடைய அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குக் குறிப்பிட்டு அந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பற்றி குறிப்பு கொடுத்தால், அது பற்றி அரசு ஆய்ந்து நடவடிக்கை எடுக்கும்.

விளாத்திக்குளம் தொகுதியில் பால்பண்ணை அமைத்தல்

96—(*வினா எண். 7849)—**திரு. ச. குமர குருபரராமநாதன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் பால்பண்ணை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திகுளம் தொகுதியில் பாலபண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை மேலும், இங்கு அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS